**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சேந்தமங்கலம்.**

**முன்னிலை: சீ. ராஜ குமாரன் B.E. L.L.B.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், சேந்தமங்கலம்.**

**2026–ஆம் ஆண்டு ஜீன் மாதம் 29–ஆம் நாள் திங்கள்கிழமை**

**2057 வது திருவள்ளுவர் ஆண்டு,பராபவ ஆண்டு,ஆனி மாதம் 15ம் நாள்**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 272/2025**

**CNR No. TNNM14-000788-2025**

அரசுக்காக

காவல் உதவி ஆய்வாளர்,

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு,

நாமக்கல். – குற்ற முறையீட்டாளர்

(குற்ற எண்.36/2025)

எதிர்

சித்தேஷ்வரன்(எ)சித்தன்,

த/பெ. கருப்பண்ணன்,

3/19, காட்டுக்கொட்டாய்,

மோளப்பாளையம், பழனியப்பனூர் அஞ்சல்,

இராசிபுரம் வட்டம், நாமக்கல். – எதிரி

**( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற R.O.C No. 814/2020/RG/F1. தேதி: 07.04.2021 உத்தரவு படி)**

| | | |
|---|---|---|
| 1. | சம்பவ நாள் | 12.02.2025 |
| 2. | புகார் நாள் (குற்ற அறிக்கை தாக்கலான நாள்) | 18.07.2025 |

<table>
<tr><td>3.</td><td>எதிரி கைது செய்யப்பட்டு<br><br>பிணையில் சென்ற நாள்</td><td><table><tr><td>எதிரி கைது செய்யப்பட்ட நாள்</td><td>பிணையில் சென்ற நாள்</td></tr><tr><td>12.02.2025</td><td>12.02.2025</td></tr></table></td></tr>
<tr><td>4.</td><td>எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன.</td></tr>
<tr><td>5.</td><td>BNSS பிரிவு 263(2) ன் கீழான கேள்வி</td><td>07.11.2025</td></tr>
<tr><td>6.</td><td>எதிரியின் பதில்</td><td>பொய் வழக்கு</td></tr>
<tr><td>7.</td><td>வழக்கின் விசாரணை தொடங்கிய நாள்</td><td>20.01.2026</td></tr>
<tr><td>8.</td><td>சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td><table><tr><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>சாட்சிகளின் பெயர்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr><tr><td>அ.சா.1</td><td>செல்வம்</td><td>20.01.2026</td><td>20.01.2026</td></tr><tr><td>அ.சா.2</td><td>கோபிநாத்</td><td>20.01.2026</td><td>20.01.2026</td></tr><tr><td>அ.சா.3</td><td>குணசேகரன்</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr><tr><td>அ.சா.4</td><td>சிவா</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr><tr><td>அ.சா.5</td><td>மனோகரன்</td><td>24.06.2026</td><td>24.06.2026</td></tr></table></td></tr>
<tr><td>9.</td><td>வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள்</td><td>24.06.2026</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 10. | BNSS பிரிவு 351(1)(ஆ) ன் கீழான கேள்வி | 25.06.2026 |
| 11. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | 29.06.2026 |
| 12. | தீர்ப்பு | முடிவாக, எதிரி மீதான குற்றச் சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டுநிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1) ன் கீழ்விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 13. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தீர்ப்பின் நகல் வழுங்கப்பட்ட நாள் | 29.06.2026 |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | இல்லை. |

இந்த வழக்கானது 25.09.2025–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு,அரசு தரப்பில் திருமதி. P. கவிதா, அரசு உதவி வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு. R. செல்வராஜ், அவர்கள் முன்னிலையாகியும், 25.06.2026–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு

வந்த போது, இருதரப்பும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப் பட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 12.02.2025ம் தேதி காலை 08.00 மணிக்கு பேளுக்குறிச்சி காவல் நிலைய சரகம் வெள்ளக்கணவாய் ராஜு என்பவரது காட்டில் இவ்வழக்கின் எதிரி சித்தன்(எ)சித்தேஷ்வரன் என்பவர்அரசு அனுமதியின்றி, பனை மரத்தில் இருந்து கள்ளை இறக்கி சுமார் 2 லிட்டர் விற்பனைக்காக வைத்திருந்ததாக எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act 2024 –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2) இவ்வழக்கின் இறுதி அறிக்கை மற்றும் பிற ஆவணங்களின் பரிசீலனை செய்ததில் எதிரி மீது முதல் நிலை வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இந்த வழக்கினை ஆண்டு பட்டிகை வழக்கு எண் 272/2025 ன் கீழ் கோப்புக்கு எடுத்துக்கொண்டு, எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பானையின் பேரில் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும், BNSS 230–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டது.

3) வழக்கு ஆவணங்களின் நகல்களை எதிரி படித்துப் பார்க்கப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், BNSS 193–ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து, எதிரி மீது சொல்லப்பட்டுள்ள குற்றம் குறித்து எடுத்துரைக்கப் போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act –ன் கீழான

குற்றச்சாட்டுகளின் சாராம்சம் குறித்து எதிரிக்கு எடுத்துரைத்து எதிரியிடம் வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து குற்றவாளி இல்லை என்றார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க, அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**5). அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:-**

**5.1. அ.சா.1 செல்வம் தனது சாட்சியத்தில்,** கடந்த 12.02.2025ம் தேதி காவல் ஆய்வாளர் திரு.சங்கரபாண்டியன் அவர்களின் வாய்மொழி உத்தரவுபடி உதவி ஆய்வாளர் திரு.மனோகரன் தலைமையில் தானும் தலைமை காவலர் திரு.கோபிநாத் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்ததாகவும், அன்றைய தினம் காலை 08.00 மணியளவில் பேளுக்குறிச்சி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட வெள்ளக்கனவாய் பொன்மகள் திருமண மண்டபம் ராஜீ என்பவரது தோட்டத்தில் கண்காணித்தபோது சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் சிவப்புநிற பிளாஸ்டிக்குடத்துடன் நின்று கொண்டிருந்ததாகவும், எதிரியை தாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் சித்தன்(எ) சித்தேஷ்வரன் த.பெ.கருப்பண்ணன் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக கள் இறக்கியதாகவும் தான் வைத்திருக்கும் சிவப்புநிற பிளாஸ்டிக்குடத்தில் கள் இருப்பதாகவும் கூறியதாகவும், ஆஜர் எதிரி

சித்தன்(எ) சித்தேஷ்வரன் தான் வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள சிவப்புநிற பிளாஸ்டிக்குடத்தை ஆய்வு செய்தபோது அதில் 2 லிட்டர் அளவு கள் இருந்தததாகவும், அதனால் உதவி ஆய்வாளர் காலை 08.10 மணிக்கு காரணம் கூறி ஆஜர் எதிரி சித்தன்(எ) சித்தேஷ்வரன் கைது செய்ததாகவும், பின்னர் உதவி ஆய்வாளர் ஆஜர் எதிரி சித்தன்(எ) சித்தேஷ்வரன் விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் ஆய்வாளர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.கோபிநாத் மற்றும் தனது முன்னிலையில் பதிவு செய்ததாகவும், எதிரி சித்தன்(எ) சித்தேஷ்வரன் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் பனை மரத்தில் இருந்து கள்ளை இறக்கி விற்பனை செய்து வந்ததாகவும் தான் வைத்திருந்த கள்ளை விற்பனைக்கு வைத்திருந்ததாகவும் கூறியதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையது தான் என்றும், பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள சிவப்புநிற பிளாஸ்டிக்குடத்தில் இருந்த 2 லிட்டர் கள்ளை அஜர் செய்தார் என்றும் அதை உதவி ஆய்வாளர் தங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாகவும், அதில் தான் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், பின்னர் அந்த கள்ளை அழித்தல் மகஜர் மூலம் கீழே ஊற்றி அழிக்கப்பட்டதாகவும், அழித்தல் மகஜருடன் கூடிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.36/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும், வழக்கை உதவி ஆய்வாளர் தன்னுடைய புலன் விசாரணைக்கு

எடுத்துக்கொண்டதாகவும், பின்னர் 12.02.2025ம் தேதி உதவி ஆய்வாளர் உடன் தானும் தலைமை காவலர் திரு.கோபிநாத் சம்பவ இடம் சென்றதாகவும், 15.00 மணிக்கு உதவி ஆய்வாளர் பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் தங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதில் தான் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், இது சம்மந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகவும், அழித்தல் மகசருடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆகவும், பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யபட்டது.

**5.2. அ.சா.2 கோபிநாத் தனது சாட்சியத்தில்,** கடந்த 12.02.2025ம் தேதி காவல் ஆய்வாளர் திரு.சங்கரபாண்டியன் அவர்களின் வாய்மொழி உத்தரவுபடி உதவி ஆய்வாளர் திரு.மனோகரன் தலைமையில் தானும் தலைமை காவலர் திரு.செல்வம் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்ததாகவும், அன்றைய தினம் காலை 08.00 மணியளவில் பேளுக்குறிச்சி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட வெள்ளக்கனவாய் பொன்மகள் திருமண மண்டபம் ராஜீ என்பவரது தோட்டத்தில் கண்காணித்தபோது சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் சிவப்புநிற பிளாஸ்டிக்குடத்துடன் நின்று கொண்டிருந்ததாகவும், எதிரியை தாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் சித்தன்(எ) சித்தேஷ்வரன் த.பெ.கருப்பண்ணன் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக கள் இறக்கியதாகவும் தான் வைத்திருக்கும் சிவப்புநிற

பிளாஸ்டிக்குடத்தில் கள் இருப்பதாகவும் கூறியதாகவும், ஆஜர் எதிரி சித்தன்(எ) சித்தேஷ்வரன் தான் வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள சிவப்புநிற பிளாஸ்டிக்குடத்தை ஆய்வு செய்தபோது அதில் 2 லிட்டர் அளவு கள் இருந்ததாகவும், அதனால் உதவி ஆய்வாளர் காலை 08.10 மணிக்கு காரணம் கூறி ஆஜர் எதிரி சித்தன்(எ) சித்தேஷ்வரன் கைது செய்ததாகவும், பின்னர் உதவி ஆய்வாளர் ஆஜர் எதிரி சித்தன்(எ) சித்தேஷ்வரன் விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் ஆய்வாளர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.செல்வம் மற்றும் தனது முன்னிலையில் பதிவு செய்ததாகவும், எதிரி சித்தன்(எ) சித்தேஷ்வரன் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் பனை மரத்தில் இருந்து கள்ளை இறக்கி விற்பனை செய்து வந்ததாகவும் தான் வைத்திருந்த கள்ளை விற்பனைக்கு வைத்திருந்ததாகவும் கூறிதாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள சிவப்புநிற பிளாஸ்டிக்குடத்தில் இருந்த 2 லிட்டர் கள்ளை அஜர் செய்ததாகவும், அதை உதவி ஆய்வாளர் தங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாகவும், அதில் தான் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், பின்னர் அந்த கள்ளை அழித்தல் மகஜர் மூலம் கீழே ஊற்றி அழிக்கப்பட்டதாகவும், அ.சா.ஆ.2 அழித்தல் மகஜருடன் கூடிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.36/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும்,

வழக்கை உதவி ஆய்வாளர் தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டதாகவும், பின்னர் 12.02.2025ம் தேதி உதவி ஆய்வாளர் உடன் தானும் தலைமை காவலர் திரு.கோபிநாத் சம்பவ இடம் சென்றதாகவும், 15.00 மணிக்கு உதவி ஆய்வாளர் பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் தங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதில் தான் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், அ.சா.ஆ.3 பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், இது சம்மந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 ன் மூலம் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**5.3. அ.சா.3 குணசேகரன் தனது சாட்சியத்தில்,** வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும், எதிரியை தெரியும் என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**5.4. அ.சா.4 சிவா தனது சாட்சியத்தில்,** தான் கடந்த 2024 முதல் 2025ம் வருடம் வரை நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்ததாகவும், கடந்த 12.02.2025ம் தேதி தனது தலைமையில் தலைமை காவலர் திரு.கோபிநாத் மற்றும் தலைமை காவலர் திரு.செல்வம் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்ததாகவும், அன்றைய தினம் காலை 08.00 மணியளவில் பேளுக்குறிச்சி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட வெள்ளக்கனவாய் பொன்மகள் திருமண மண்டபம் ராஜீ என்பவரது தோட்டத்தில் கண்காணித்தபோது சுமார் 60 வயது

மதிக்கத்தக்க ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் கையில் சிவப்புநிற பிளாஸ்டிக்குடத்துடன் நின்று கொண்டிருந்ததாகவும், எதிரியை தாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் சித்தன்(எ) சித்தேஷ்வரன் த.பெ.கருப்பண்ணன் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக கள் இறக்கியதாகவும் தான் வைத்திருக்கும் சிவப்புநிற பிளாஸ்டிக்குடத்தில் கள் இருப்பதாகவும் கூறியதாகவும், ஆஜர் எதிரி சித்தன்(எ) சித்தேஷ்வரன் தான் வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள சிவப்புநிற பிளாஸ்டிக்குடத்தை ஆய்வு செய்தபோது அதில் 2 லிட்டர் அளவு கள் இருந்ததாகவும், அதனால் காலை 08.10 மணிக்கு காரணம் கூறி ஆஜர் எதிரி சித்தன்(எ) சித்தேஷ்வரன் கைது செய்ததாகவும், பின்னர் ஆஜர் எதிரி சித்தன்(எ) சித்தேஷ்வரன் விசாரித்தபோது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.கோபிநாத் மற்றும் தலைமை காவலர் திரு.செல்வம் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்ததாகவும், எதிரி சித்தன்(எ) சித்தேஷ்வரன் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் பனை மரத்தில் இருந்து கள்ளை இறக்கி விற்பனை செய்து வந்ததாகவும் தான் வைத்திருந்த கள்ளை விற்பனைக்கு வைத்திருந்ததாகவும் கூறியதாகவும், பின்னர் எதிரி விற்பனைக்காக வைத்திருந்த 5 லிட்டர் கொள்ளவு உள்ள சிவப்புநிற பிளாஸ்டிக்குடத்தில் இருந்த 2 லிட்டர் கள்ளை அஜர் செய்ததாகவும், அதை தலைமை காவலர் திரு.கோபிநாத் மற்றும் தலைமை காவலர் திரு.செல்வம் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாகவும், அதனை தான் தனது செல்போனில் புகைப்படம் எடுத்ததாகவும், பின்னர் அந்த கள்ளை அழித்தல் மகஜர் மூலம் கீழே ஊற்றி அழித்ததாகவும், பின்னர் எதிரியுடன்

நிலையம் வந்து சம்பவம் தொடர்பாக நிலைய குற்ற எண்.36/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒரு நகலை தனது புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டதாகவும், பின்னர் இவ்வழக்கின் எதிரியை தக்க பிணையில் விடுவித்ததாகவும், பின்னர் அன்றைய தினமே  தலைமை காவலர் திரு.கோபிநாத் மற்றும் தலைமை காவலர் திரு.செல்வம் ஆகியோருடன் சம்பவ இடம் சென்று 15.00 மணிக்கு  பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் தலைமை காவலர் திரு.கோபிநாத் மற்றும்  தலைமை காவலர் திரு.செல்வம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் தலைமை காவலர் திரு.கோபிநாத், தலைமை காவலர் திரு.செல்வம், குணசேகரன் மற்றும் சிவா ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இறுதியாக எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.5 ன் மூலம் புகைப்படம் அ.சா.ஆ.5 ஆகவும், BSA பிரிவு 63(4)(C) ன் கீழான சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது.

**6)** இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக தோன்றும் சாட்சிகளின் சாட்சியம் குறித்து, எதிரியிடம் BNSS 351(1)(ஆ)–ன் படி எடுத்துரைக்க, எதிரி பொய் சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை எனக் கூறியதன்பேரில், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

7) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

8) அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

9) எதிரி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இவ்வழக்கில் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை வழக்கு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

10.1. இவ்வழக்கில் எதிரி கடந்த 12.02.2025ம் தேதி காலை 08.00 மணிக்கு வெள்ளக்கணவாய் பொன்மகள் திருமண மண்டபம் ராஜு என்பவரது தோட்டத்தில் சட்டத்திற்கு புறம்பாக 2 லிட்டர் கள்ளை இறக்கி கள்ளத்தனமாக விற்கவைத்திருந்ததாக எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

10.2. அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை கவனமாக ஆராயும் போது, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 காவல் உதவி ஆய்வாளர் திரு. மனோகரன் தனது சாட்சியத்தில் அ.சா.1 செல்வம் மற்றும் அ.சா.2 கோபிநாத் ஆகியோருடன் மதுவிலக்கு மற்றும் குற்றத்தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்த போது வெள்ளக்கணவாய் பொன்மகள் திருமண மண்டபம் ராஜு என்பவரது தோட்டத்தில் எதிரி சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்துடன் நின்று

கொண்டிருந்ததாகவும், அவரிடம் விசாரித்த போது, எதிரி தானாக முன் வந்து தான் சட்டத்திற்கு புறம்பாக கள் இறக்கி விற்க வைத்தருந்ததாகவும், தான் வைத்திருக்கும் சிவப்புநிற பிளாஸ்டிக் குடத்தில் கள் இருப்பதாகவும் கூறியதன் பேரில் எதிரியை அ.சா.5 காவல் உதவி ஆய்வாளர் திரு. மனோகரன் கைது செய்ததாகவும், பின்பு எதிரி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், பின்பு எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.5 காவல் உதவி ஆய்வாளர் திரு. மனோகரன் பதிவு செய்து அதன் தொடர்ச்சியாக எதிரி ஆஜர் செய்த 5 லிட்டர் கொள்ளளவு உள்ள சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தில் இருந்த 2 லிட்டர் கள்ளை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட கள்ளை அழித்தல் மகசர் தயார் செய்து அழித்ததாகவும், பின்பு அ.சா.5 காவல் உதவி ஆய்வாளர் திரு. மனோகரன் அன்றைய தினமே 15.00 மணிக்கு அ.சா.1 செல்வம் மற்றும் அ.சா.2 கோபிநாத் ஆகியோர்களுடன் சம்பவயிடத்திற்கு சென்று சம்பவயிடத்தை பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

10.3. இவ்வழக்கின் அ.சா.5 திரு. மனோகரன் தனது சாட்சியத்தில், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.1 செல்வம் மற்றும் அ.சா.2 கோபிநாத் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து மேற்படி வழக்கு சொத்துகளை கைப்பற்றி அழித்ததற்கு பின்பு அன்றையதினமே 15.00 மணிக்கு சம்பவயிடம் சென்று அ.சா.1 செல்வம் மற்றும் அ.சா.2 கோபிநாத் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்பு எதிரி மீது சட்டப்பிரிவு **4(1)(C) TNP Act** ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**10.4.** இவ்வழக்கில் அ.சா.1 செல்வம் மற்றும் அ.சா.2 கோபிநாத் ஆகியோர் எதிரியை வெள்ளக்கணவாய் பொன்மகள் திருமண மண்டபம் ராஜு என்பவரது தோட்டத்தில் பிடித்ததாக கூறும் நிலையில் மேற்படி ராஜு என்பவரை வழக்கின் சாட்சியாக அரசுதரப்பில் விசாரிக்கவில்லை. மேலும், சம்பவயிடமானது ராஜு என்பவரது தோட்டம் தானா என்பதை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை.

**10.5.** இவ்வழக்கில் அ.சா.5 திரு. மனோகரன் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். ஆனால், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் புதிய பொருண்மைகள் எதுவும் கண்டறியப்பட்டு சான்றிடப்படவில்லை. எனவே, பாரதிய சாட்சிய அதிநயம் பிரிவு 23 ன் கீழ் போலீசாரிடம் கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை அந்த வழக்கின் எதிரிக்கு எதிராக பயன்படுத்த இயலாது. எனவே, இவ்வழக்கில் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் புதிய பொருண்மைகள் கண்டறியப்பட்டு சான்றிடப்படாததால் எதிரி போலீசாரிடம் கொடுத்ததாக சொல்லப்படும் வாக்குமூலத்தை எதிரிக்கு எதிராக பயன்படுத்த இயலாது.

**10.6.** இவ்வழக்கில் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரிக்கு எதிராக பயன்படுத்த இயலாது என்ற நிலையில் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க இவ்வழக்கில் எதிரியிடமிருந்து கள்ளை கைப்பற்றியதாக கூறப்படும் கைப்பற்றுதல் மகசரை நிரூபித்தல் அவசியமாகும்.

**10.7.** தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்பிரிவு 32 ன் கீழ் மேற்படி சட்டத்தின் கீழ் ஏதேனும் கள்ளை கைப்பற்றும் போது, அந்த கள்ளை வைத்திருக்க பயன்படுத்திய உபகரணத்தை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். ஆனால், இவ்வழக்கில் எதிரியிடமிருந்து சுமார் 5

லிட்டர் பிடிக்கக்கூடிய சிவப்புநிற பிளாஸ்டிக் குடத்தில் சுமார் 2 லிட்டர் பனங்கள் கைப்பற்றப்பட்டதாக கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும், அழித்தல் மகசரில் சுமார் 2 லிட்டர் பனங்கள்ளை கொட்டி அழிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கில் மேற்படி 5 லிட்டர் கொள்ளளவு உள்ள சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. மேற்படி கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றப்பட்ட பொருட்களை நீதிமன்றத்தில் முறையாக ஒப்படைக்காத நிலையில் எதிரியிடமிருந்து கள் கைப்பற்றப்பட்டது என்ற பொருண்மை கேள்விக்குள்ளாகிறது.

10.8. இவ்வழக்கில் அ.சா.5 திரு. மனோகரன் தனது புலன் விசாரணையின் போது எதிரியை சம்பவயிடத்தில் வைத்து பிடித்ததாக சொல்லப்படும் அ.சா.1 செல்வம் மற்றும் அ.சா.2 கோபிநாத் ஆகியோரது முன்னிலையிலேயே எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து பின்னிட்டு அதே சாட்சிகளின் முன்னிலையில் மேற்படி எதிரி ஆஜர் செய்த கள்ளை கைப்பற்றியதாகவும், பின்னர் அதே சாட்சிகளின் முன்னிலையில் மேற்படி கள்ளை அழித்ததாகவும் பின்பு அன்றைய தினமே 15.00 மணிக்கு சம்பவயிடம் சென்று மேற்படி சாட்சிகளான அ.சா.1 செல்வம் மற்றும் அ.சா.2 கோபிநாத் ஆகியோர் முன்னிலையிலேயே சம்பவயிடத்தை பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.5 ன் சாட்சியத்திலிருந்து இவ்வழக்கில் அ.சா.1 செல்வம் மற்றும் அ.சா.2 கோபிநாத் ஆகிய இருவரின் முன்னிலையிலேயே ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டதாக அரசுதரப்பு வழக்கு உள்ளது. இவ்வழக்கில் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடத்தை கவனமாக ஆராயும் போது, சம்பவயிடமானது

வெள்ளக்கணவாய் பொன்மகள் திருமண மண்டபம் ராஜு என்பவரது தோட்டத்திற்கு அருகே பொன் மகள் தோட்டம், கந்தசாமி செட்டியார் தோட்டம், முருகேசன் தோட்டம், இராஜி தோட்டம் மற்றும் ராஜி ஓட்டு வீடு அமைந்து உள்ளது என்பது தெரியவருகிறது. இவ்வாறான நிலையில் அ.சா.5 காவல் உதவி ஆய்வாளர் திரு. மனோகரன் தனி நபர் சாட்சிகள் யாரும் அல்லாமல் மேற்படி அ.சா.1 செல்வம் மற்றும் அ.சா.2 கோபிநாத் ஆகியோரை மட்டுமே முன் நிறுத்தி முழு வழக்கையும் புலன் விசாரணை செய்திருப்பது ஏற்கத்தக்கதல்ல.

**10.9.** பொதுவாக, ஒரு வழக்கின் புகார்தாரரே புலன் விசாரணை அதிகாரியாகவும் இருக்க கூடாது என்ற நிலையில் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 திரு. மனோகரன் சம்பவயிடத்தில் எதிரியிடமிருந்து கள்ளை கைப்பற்றியதாக சொல்லப்படுவதற்கு பின்னர் மேற்படி சம்பவத்தின் பேரில் நிலைய பொறுப்பு அலுவலரிடம் தனியறிக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால், இவ்வழக்கில் அ.சா.5 திரு. மனோகரன் தனியறிக்கை எதுவும் தாக்கல் செய்யாமல் நேரடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விட்டு அதன் பேரில் அவரே முழு வழக்கையும் புலன் விசாரணை செய்திருப்பது ஏற்கத்தக்கதல்ல.

**10.10.** மேலும், இவ்வழக்கில் எதிரி கள்ளை விற்பனை செய்ய வைத்திருந்தார் என்பதை நிரூபிக்க சாட்சிகள் அ.சா.3 குணசேகரன் மற்றும் அ.சா.4 சிவா ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். ஆனால், மேற்படி சாட்சிகள் தங்களுக்கு வழக்கைப்பற்றி எதுவும் தெரியாது என சாட்சியமளித்து அரசுதரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்கள்.

**10.11**. மேலும் இவ்வழக்கில் எதிரியை கள்ளுடன் புகைப்படம் எடுத்ததாக அ.சா.5 சாட்சியமளித்து மேற்படி புகைப்படமானது அரசுதரப்பில்

அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி அ.சா.ஆ.5 புகைப்படத்தை கவனமாக ஆராயும் போது, எதிரியிடம் சிவப்பு நிற பிளாஸ்டிக் குடத்தில் கள் இருப்பது போல் தெரியவில்லை. எனவே, அ.சா.ஆ.5 புகைப்படத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக அறுதியிட்டு கூற இயலாது.

**11)** அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை மிககவனத்துடன் பரிசீலிக்கும் போது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12) முடிவாக,**

முடிவாக, எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1) ன் கீழ் எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகள் எதுவும் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. எனவே, வழக்கு சொத்துகள் குறித்து உத்தரவு இல்லை. எதிரி எழுதி கொடுத்த பிணைய பத்திரங்கள் இவ்வழக்கு மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு தானாக ரத்தாகி விடும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026–ஆம் ஆண்டு ஜீன் மாதம் 29–ஆம் நாள் திங்கள்கிழமை** ஆகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAJAKUMARAN S
Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.06.29 14:40:33 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**அரசு தரப்பு சாட்சிகள்–**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | செல்வம் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 2. | அ.சா.2 | கோபிநாத் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 3 | அ.சா.3 | குணசேகரன் | கேள்வி நிலை சாட்சி |
| 4 | அ.சா.4 | சிவா | கேள்வி நிலை சாட்சி |
| 5 | அ.சா.5 | மனோகரன் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்–**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | அழித்தல் மகசருடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | பார்வை மகசர் | அ.சா.1 |
| 4 | அ.சா.ஆ.4 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் | அ.சா.2 |
| 5 | அ.சா.ஆ.5 | புகைப்படம் | அ.சா.5 |
| 6 | அ.சா.ஆ.6 | BSA பிரிவு 63(4)(C) சான்றிதழ் | அ.சா.5 |
| 7 | அ.சா.ஆ.7 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |

| | | | |
|---|---|---|---|
| 8 | அ.சா.ஆ.8 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |

**அரசுத் தரப்பு சான்று பொருள்–** இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் –**

இல்லை.

RAJAKUMARAN S Digitally signed by RAJAKUMARAN S Date: 2026.06.29 14:40:41 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**குறிப்பு–**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்றக் காவலில் இல்லை.
2. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

RAJAKUMARAN S Digitally signed by RAJAKUMARAN S Date: 2026.06.29 14:40:46 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

CASE SUMMARY

**CC- 272/2025, Cr.No.36/2025**
(CNR.No. TNNM-14-000788-2025)
PEW NAMAKKAL

| S.No | Particulars | Purpose |
|---|---|---|
| i | The period of remand of the accused | - |
| ii | The date of filing of the Complainant/Final report in the Court | 18.07.2025 |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 07.11.2025 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like | NIL |

<table>
<tr><td></td><td>petitions under Section 355 of the BNSS</td><td></td></tr>
<tr><td>vi</td><td>Date of Examination in-chief and cross-examination of a witness</td><td><table>
<tr><th>Witness examined as</th><th>Date of Chief Examination</th><th>Date of Cross Examination</th></tr>
<tr><td>PW1-Selvam</td><td>20.01.2026</td><td>20.01.2026</td></tr>
<tr><td>PW2-Gobinath</td><td>20.01.2026</td><td>20.01.2026</td></tr>
<tr><td>PW3-Gunasekaran</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr>
<tr><td>PW4-Siva</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr>
<tr><td>PW5-Manokaran</td><td>24.06.2026</td><td>24.06.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>vii</td><td>Date of examination of the accused under section 351(1)(b) of the Code</td><td>25.06.2026</td></tr>
<tr><td>viii</td><td>Details of abscondence of an accused and his appearance/production, as the case may be;</td><td>NIL</td></tr>
<tr><td>ix</td><td>Grant of stay by superior Courts and the results thereof</td><td>NIL</td></tr>
</table>

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.06.29 14:40:53 +0530

Judicial Magistrate,
Sendamangalam.